1981 ஏப்ரல் 7]

துறையூர் அரசினர் மருத்துவமனை

*வினா எண். 683— திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் அரசினர் மருத்துவமனையை மேலும் அதிக படுக்கைகள் கொண்டதாக விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை படுக்கைகள் ? திட்ட மதிப் பீடு எவ்வளவு ? பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) 24 கூடுதல் படுக்கைகள். திட்ட மதிப்பீடு ரூபாய் 2.05 இலட்சம். திருச்சி மாவட்ட மருத்துவ அதிகாரி, பொதுப்பணித் துறையினரிடம் அதற்கான அமைப்புப் படமும், மதிப்பீடும் கோரியுள்ளார். அது பெறப்பட்டு மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர், அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி அரசு அனுமதி வழங்கிய பின்னர் தான் பணி தொடங்கும்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29—2—1980 அன்று அனுமதி அளித்துள்ளதாகத் தெரிகிறது. அதாவது வரைபடம் கோரியுள்ளதாகத் தெரி கிறது. வரைபடம் கேட்பதற்கே $1\frac{1}{2}$ ஆண்டுகாலமானால், திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் ஆகும் ? எனவே, விரை வில் வரைபடம் வாங்கி அங்கே மருத்துவமனையை அமைக்க அரசு முயலுமா ? ஏனென்றால் அந்த இடம் ஆதிவாசிகள் அதிகமாக வாழும் இடம். ஆகவே அவர்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ மனையைக் கட்ட அரசு விரைவில் நட வடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : விரைவில் அந்தத் திட்டத்தை முடித்துவிடுவதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறோம். வெகு விரைவில் அது முடிக்கப்படும் என்று அரசு கருதுகிறது.

சிறுவலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் கிணறு அமைக்கும் திட்டம்

*வினா எண். 684— திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?